சார்பு நீதிமன்றம், சங்ககிரி

MCOP.No.79/2019

ம.சா.2

நாள். 23.01.2025.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வீரணன் | மதம்: | இந்து |
| தகப்பனார்/கணவர் பெயர்: | --- | ஜாதி: | --- |
| கிராமம்: | --- | வேலை: | --- |
| வட்டம்: | --- | வயது: | --- |

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் இம்மனுவில் 3 ம் தரப்பினர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள். விபத்து நடந்த இடம் தென்வடல் ரோடு. அந்த இடம் செவல்பட்டி சந்திப்பு என்றால் சரிதான். அந்த சந்திப்பு அருகில் செவல்பட்டி சாலையில் சாலை தடுப்பு உள்ளது என்றால் சரிதான். விபத்தின் போது பேருந்து அருப்புகோட்டையிலிருந்து வந்து காரியாபட்டிக்கு கிழக்கு நோக்கி திரும்பியது

என்றால் சரிதான். இறந்து போன பாஸ்கர் மெதுவாகவும், கவனமாகவும் வந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. பேருந்தின் ஓட்டுநர் சரியான பாதையில் தான் பேருந்தை ஓட்டி சென்றார் என்றால் சரியல்ல. பாஸ்கர் எனக்கு உறவினர் இல்லை. பாஸ்கர் எனக்கு உள்ளூர்காரரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-வீரணன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.